විද්‍යා, තාක්ෂණ හා පර්යේෂණ අමාත්‍යාංශය
விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
Ministry of Science, Technology & Research

මගේ යොමුව / எனது இல. / My Ref. TR/2/12/VRC/ආරක්ෂාව | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2019.03.

உள்ளக சுற்றறிக்கை: 01/2019

சகல விஞ்ஞான, தொழில்நுட்ப அலுவலர்களுக்கும்
சகல பிரதேச செயலகங்களுக்கும்

<u>விதாதா வள நிலையங்களைச் சார்ந்த காவல் உத்தியோகத்தர்களின் கடமை நேரங்கள்</u>

விதாதா வள நிலையங்களைச் சார்ந்த காவல் உத்தியோகத்தர்களின் கடமைகளும் அவர்களுக்குரிய கடமை நேரங்களும் கீழே தரப்பட்டுள்ளது

I. விதாதா வள நிலையங்களில் கடமையாற்றும் காவல் உத்தியோகத்தர்கள், வாரத்தில் 06 நாட்கள் கடமையாற்றுதல் வேண்டும் என கூறப்படுவதோடு ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அரச விடுமுறை தினங்கள் என்பன சாதாரணதொரு அலுவலக நாளாக கருதப்படும். அவர்கள் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை நாளினை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர் ஆவார்.

II. ஒரு பணிமுறைக்குள் 09 மணித்தியாலம் உள்ளடங்கும் என்பதோடு இக் கால வரையறையானது, திணைக்கள தலைவர் அல்லது உடனடி மேலதிகாரியினால் அவரது விருப்பத்தின் கீழ் தீர்மானிக்கப்படும். எனினும் இந்த ஒரு பணிமுறைக்குரிய கால அளவானது ஆக கூடுதலாக 12 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

III. ஒரு பணி முறையில் 09 மணித்தியாலங்களையும் விட அதிகமாக செய்யப்படும் சேவைக் காலப்பகுதியானது மேலதிக வேலை நேரமாக கருதப்படும். ஒரு மாதத்திற்கு செய்யக்கூடிய அதிகூடிய மேலதிக வேலை நேரம் 78 மணித்தியாளங்கள் ஆகும்.

IV. விதாதா வள நிலையத்தை சார்ந்த காவல் உத்தியோகத்தர்கள் 12 மணித்தியாலங்களுக்கும் அதிகமான மணித்தியாலங்களில் பணியாற்றுவதை தவிர்ப்பதற்கும் அது போன்று 12 மணித்தியாலங்களுக்கும் அதிகமான காலப் பகுதிக்கு காவல் உத்தியோகத்தர்களினது சேவை விதாதா வள நிலையத்திற்கு தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் கனிஷ்ட அலுவலர் ஒருவர் 12 மணித்தியாலங்களுக்கும் அதிகப்பட்ட அக் காலப்பகுதியில் காவல் உத்தியோகத்தராக கடமையாற்ற விரும்பினால் திணைக்கள தலைவர் அல்லது உடனடி மேலதிகாரியினால் அவரை அப் பதவியில் பணியாற்ற அனுமதிக்கலாம் என்பதுடன் அக் கனிஷ்ட அலுவலரின் அந்த மேலதிக நேர கட்டணமானது அவருக்குரிய நிலையான பதவிக்குரிய கடமை நேரத்திற்கு அமைவுற கணிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்படும்.

V. காவல் உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவினை கணிப்பீடு செய்யும் போது தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VIII இன் உப பிரிவு 6.1 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவுற கணித்தல் வேண்டும்.

VI. விதாதா வள நிலைய காவல் உத்தியோகத்தர்கள் தமது நாளாந்த பணி முறையில் 12 மணித்தியாலங்கள் பணியில் ஈடுபடல் வேண்டும் என்பதோடு அவர்கள் அலுவலகத்தின் வளாகம் அத்துடன் அதற்குள் அமைந்துள்ள சகல சொத்துக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அந்த சொத்துக்களுக்கு அவர்களுக்குரித்தான வேலை பணிமுறையின் போது ஏற்படக்கூடிய எந்த விதமான சேதங்களுக்கும் அவர்களே பொறுப்புக் கூறுதல் வேண்டும் என்பதனை அவர்களுக்கு அறியச் செய்தல் வேண்டும்.

சிந்தக்க எஸ். லொகுஹெட்டி
செயலாளர்
விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

பிரதி: மேலதிக செயலாளர் (தொழில்நுட்பவியல் மாற்றீடு) - உரிய நடவடிக்கைக்காக பிரதான

கணக்காளர் - உரிய நடவடிக்கைக்காக

சகல பிரதேச செயலகங்களுக்கும் - உரிய நடவடிக்கைக்காக

3 වන මහල, "සෙත්සිරිපාය" 1 වන අදියර, බත්තරමුල්ල - 3ஆம் தளம், "செத்சிறிபாய" கட்டம் I, பத்தரமுல்லை. - 3rd floor, "Sethsiripaya" Stage I, Battaramulla.
ගරු අමාත්‍යතුමා / கௌரவ. அமைச்சர் / Hon Minister: (+9411) 2186152/ 2 186034, (+9411) 2187153, ss.@sujeewasenasinghe.lk
ලේකම් / செயலாளர் / Secretary: (+9411) 2784811, (+9411) 2785162, scc@mostr.gov.lk
කාර්යාලය / காரியாலயம் / Office: (+9411) 2879410, (+9411) 2879412, www.mostr.gov.lk
වෙබ් අඩවිය வலைத்தளம் Web Site - www.mostr.gov.lk